சிவமயம்.

தஞ்சைமாநகரைச்சார்ந்த

கரந்தையம்பதி

சுப்பிரமணியசுவாமிபதிகமும்

தோத்திரங்களும்.

இஃது

ஸ்ரீ கரந்தையம்பதியிலிருக்கும்

அ-குருசாமிபிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படி

ந-வீரபத்திரபிள்ளையவர்கள்

இயற்றியது.

ஸ்ரீ தஞ்சைமாநகரைச்சார்ந்த

தென்னகையிலிருந்தும்

கு-தூணைசாமிபிள்ளையவர்களால்

சென்னைத் தண்டையார்பேட்டை

இலக்குமீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வராலு ஆனிமீ

ஓ—

சிவமயம்.

விநாயகர்

காப்பு.

வெண்பா.

ஆத்திபுனை யம்பனரு ளாறுமுக தேசிகன்மேற்
றோத்திரப்பா மாலையான் சொல்லவே—ஏத்துமன்பர்
நெஞ்சுலாவு நித்தமுத்த நீடுதிக்கை யானனத்தன்
மஞ்சுலாவு காளிறைஞ்சு வாம்.

சிவமயம்.

திருக்கரந்தைப்பதிகம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்பூத்த மணிமகுட முடியு மெற்றித்
திருநீறும் பன்னிருநேத் திரமு நீபத்
தார்பூத்த நூன்மார்புந் தடக்கை வேலுந்
தகைபூத்த கோசிகஞ்சே ரிடையுங் காமர்
வார்பூத்த சதங்கைமுழங் கடியு மஞ்ஞை
வாகனமீ தெந்நாளும் வரக்காண் பேனே
ஆர்பூத்த மாதவர்சூழ் திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுசத் தமல வேளே. (க)

பூதலத்தி லறிவுடையோ ரனைத்து முன்றன்
பொன்னடிக்கன் பணுதினமும் புரிந்து மேலாம்
போதநிலை யடைந்தார்க ளெளியே னிந்தப்
பொய்ம்மையுறுந் தேகாதி புவனந் தன்னைக்
காதலுடன் மெய்யெனக்கொண் டவத்தி னூளைக்
கழிக்கின்றே னென்னையுநீ கடைக்க ணேக்கி
ஆதரவா யாண்டருள்வாய் திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (உ)

அன்னமிடு வெனக்கேட்டோர்க் கிலையென் னும
லன்புடனோர் போதேனு மளித்தே னில்லை
துன்னுபரி பூரணநன் னிலைதே ருன்றன்
றிருமும்பர்த்தமக் கரும்பணியும் புரிந்தே னில்லை

என்னிவித மிருவினையாங் கடல்க டந்துன்
னினையடியாங் கணைகாண்பே னெளியே னந்தோ
அன்னநிறை பண்ணைகள்சூழ் திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (கூ)

திருவளரு மறைபுகழுங் கருணைக் குன்றே
தேடரிய மூக்கனியே செந்தேன் பாகே
மருவளருங் கற்பகமே யுயர்மெய்ஞ் ஞான
வாரிதியே மாமணியே மடமை யென்றன்
உருவளரு மலத்திமிர மகல வென்னு
ளுதித்தெழுந்த செழுஞ்சுடரே யுன்ரு டஞ்சம்
அருள்வளரும் பூசுரர்சூழ் திருக் கரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (எ)

சுத்திமுகத் திரசிதமுங் கயிற்றிற் பாம்புந்
தோற்றுதல்போற் சகமறிவிற் ரோற்ற மென்னும்
உத்திமுகந் தெளிந்தோரை யினங்கி டாம
லுண்மையிலா ருடன்கூடி யுழல்கின் றேனுன்
சத்திமுக மெனுஞ்சலசச் செந்தார் பூப்பத்
தபனனென வந்துதித்த குழந்தை வேலா
அத்திமுகன் றனக்கினியா திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (ஞ)

மும்மர்யைக் குறும்பகன்றங் கிரும்பாழ் தாண்டி
முழுப்பரிபூ ரணமாகின் னருளைக் கண்டு
சும்மாகின் றிடுநிலையாம் பரமா னந்தந்
தோய்வதியா னெந்நாளோ சொல்லா யும்பர்
பெம்மானே யெம்மானே யஸ்தி பாதிப்
பிரியமயச் சோதியனே பேரன் பானே

அம்மாம்பற் றடமலியுந் திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (சு)

பெண்ணுருவைக் கண்டவுட னெவர்க்கு மிச்சை
பிறக்குமென வுணைக்குசனின் றிருநா மத்தை
எண்ணுவர்க்கு முண்டாரு லுலசத் தோர்க
ளிகழாரோ நின்னருளுக் கியல்பு மாமோ
கண்ணகத்தி லெண்மணியாக் கதித்தும் போதா
கருதரிய மறைநாதா கமலப் பாதா
அண்ணருமெய்ப் பதமுதவுந் திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (எ)

பொற்பிலகு மறையீற்றின் பொருளே நித்ய
பூரணமே யுயிர்க்குயிராய்ப் பொலிந்து நிற்குஞ்
சிற்பரமே நிட்களமே பேரன் பாளர்
சித்தமிசை நடம்புரியுந் தேவ தேவே
சற்பனையொன் றில்லாமெய்க் கருணைவாழ்வே
காரணமே யென்றுனையான் கருத்திலுன்னி
அற்பகலும் போற்றவருள் திருக் கரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (அ)

காரியமாஞ் சகசீவ பரமுன் றிற்குங்
காரணமா முன் வடிவைக் காணவேண்டில்
ஓரியல்பாய் மனநினைத்துச் சிரவணாதி
யுற்றவரல் லாலயலா ருணரப் போமோ
பேரியலுங் குணங் குறிகளில்லா தென்றும்
பிறங்கு சுயம் பிரகாசப் பெற்றியானே
ஆரியர்வின் னவர்புகழுந் திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (சு)

காத்திரமோ யகலங்ணங் துண்போர் கட்குங்
காதலிலா தருந்தினர்க்கு நோர்வா ளத்தின்
மாத்திரையின் குணமலத்தை நீக்கல் போல
வாய்மையுடன் றுதிப்போர்க்கு மன்னுஞர் சொல்லிலப்
பர்த்துரைக்கு மதியிலியா மென்போல் வார்க்கும்.
பவமொழித்த னின்னருளி னியல்பாங் கண்டாய்
ஆத்திபுனை யரன்புதல்வா திருக்க ரந்தை
யம்பதிவா ழாறுமுகத் தமல வேளே. (கo)

திருக்கரந்தை யம்பதிர வனங்கன் வீசுஞ்
செயற்காற்ரு தயர்ந்துநிதஞ் சிந்தை வாடித்
திருக்கரந்தை யம்பதியா திருச்சு முண்மைத்
திண்மையெனக் கருள்கரூணை தேங்கி ராறு
திருக்கரந்தை யம்பதியாங் குமர வேளே
திவ்யவுமை யருள்பாலா செங்கை வேலா
திருக்கரந்தை யம்பதிவாழ் சேயே யுன்றன்
சேவடிக்கே தினஞ்சரணஞ் சரணந் தானே. (கக)

திருக்கரந்தைப்பதிக முற்றிற்று.

சிவமயம்.

சுப்பிரமணியர் தோத்திரம்.

இராகம் – காம்போதி – அடதாளம்

கண்ணிகள்.

சீர்மிகுஞ்சிவ சரவண பவ சிவகுரு பரனே
அயிற்கரனே சுதந்தரனே வரனே செல்வமே
செல்வமே செல்வமே யெனக்கருள்வாய் தினமே. (க)

ஆர்மதிமுகக் குறமகள் தெய்வ யானையர்க்குரியா
மனப்பிரியா பரங்கிரியா வரியா ஆதியே
ஆதியே ஆதியே உனைநம்பினே னெளியேன். (உ)

செய்யமாமறைச் சிரத்தினின்றெழுந் திவ்யசிற் சுகனே
அரன்மகனே அறுமுகனே குகனே சேயனே
சேயனே சேயனே னுனதடிக்கே சரணம். (ங)

வையமூற்றுமோ ரடியளந்தநீண் மாதவன் மருகா
அருண்முருகா எனதருகா மயூர வாகனு வாகனு
வாகனு இந்தச் சமயம் வருவாய். (ச)

வஞ்சமற்றவ ருளத்துலாவுமெய் வாரணக்கொடியா
மணிமுடியா சிலம்படியா என்மீதில் வர்ம்மமோ
வர்ம்மமோ வர்ம்மமோ இன்னுமறியேன் பரனே. (ஞ)

கஞ்சனுரிட் மினிப்பு காதனைக் கண்டிருப்பேனே
நிலைப்பேனே சுகிப்பேனே அடியேன் காரண
காரண காரண எந்தாளோ வறியேன். (சு)

தோத்திரம்.

வல்லமையுடையா
கடையேன் வாழ்வதே
யுனைப்பிரிந்தே யுலகில். (எ)

இறைவனேயென்ற னிடத்திலின்னமும் இரக்கமு மிலையோ
மனஞ்சிலையோ காலம்வலையோ இனியான் என்செய்வேன்
என்செய்வேன் என்செய்வே னிதற்கெளியேன் முருகா (அ)

சாத்திரங்களைப் பழித்ததா லுனைச் சார்ந்திடப்போமோ
இதமாமோ வினைபோமோ என்னையா தற்பரா
தற்பரா தற்பரா எனக்கறியப் புகல்வாய். (கூ)

மாத்திரையளைக் கடிகையாகினும் மனமிலத்தோர்க்கே
உழைத்தோர்க்கே தனித்தோர்க்கே யலது வாய்க்குமோ
வாய்க்குமோ வாய்க்குமோ உன்றனருள் தானெவர்க்கும். (கூ)

பாரிலிச்சட் மெடுத்திந்நாள்வரை பட்டதும் போதும்
இனியேதும் ஒருதீதும் மெனக்குப் பற்றிடா
பற்றிடா பற்றிடா வரந்தருவாய் முருகா. (கூ)

சூரன்மாய்வுற வேல்விடுத்தநற் சுப்பிரமணியா
மறைக்கணியா திருத்தணியா வணிகா துய்யனே
துய்யனே துய்யனே யெனைக்கை விடாதருள்வாய். (கூ)

பத்தர்சித்தர்க ளனுதினந்தொழும் பங்கயப்பதனே
உமைசுதனே நலங்கதனே கடைக்கண் பார்த்திடாய்
பார்த்திடாய் பார்த்திடா யிதகருணைங் குமரா. (கூ)

மெத்தவுண்டல்போற் கனவுகண்டிடில் விழித்தபின்
னுறுமோ பயனுறுமோ நலந்தருமோ அதுபோல் வேலவா
வேலவா வேலவா சுகந்தருமோவாய் ஞானம். (கூ)

செங்கண் மாலய னமர்தேடருஞ் சின்மய வெளியே
அருள்வெளியே பரவெளியே ஒளியே தேவனே
தேவனே தேவனே உனக்கபயம் அபயம். (கடு)

வகரற்கருள் புரிந்தசற்குரு சாமியா யுறைவா
எனதிறைவா எங்குநிறைவா யிலங்கும் சண்முகா
சண்முகா சண்முகா உன்றன்சரணே சரணம். (கசு)

வேலுமயிலுந்துணை.

வேறு.

பண் – சாதாரி.

செய்வாய் நெஞ்சகமே வள்ளி தெய்வானைக்குகனே
ஐவாய் சென்றலை யாமற்றினந்துதி
செய்வாய் நெஞ்சகமே. (க)

உய்வார்க்கோர் மருந்தேகுக னுண்மைத் திருப்பாதம்
வைவாய்க்கும்பவ வன்பிணித்துன்பொழிந்
துய்வார்க்கோர் மருந்தே. (உ)

கண்டாய் சொல்மனமே எங்கள் கந்தனடியார்பால்
அண்டாதெங்கு மலைந்தலைந் தென்பயன்
கண்டாய்சொல் மனமே. (கூ)

உண்டாமோ வினைகள் முக மோராறுண்வடிவுங்
கண்டாமா மணித் தாளையுங் கண்டவர்க்
குண்டாமோ வினைகள். (ஈ)

மறவா திருமனமே உடல் மாலயனும் பெரியோர்க்
குறவாம் வேன்முரு கோனரு மைப்பதம்
மறவா திருமனமே. (கு)

துறவே நன்னெறியாந் திருத் தொண்டர்கள் கொண்டாடும்
விறல்வேற் கொற்றவன் மெய்யரு ளொய்திடத்
துறவே நன்னெறியாம். (சு)

கற்றோரே பெரியோர் வருங் காதலொருமூன்றும்
அற்ற சானருள் பெற்றக தின்றிடக்
கற்றோரே பெரியோர். (எ)

சற்றேய்வாய்மனமே சக சாலமெலா மொழியும்
நற்றாள் வேய்குக னல்லருளா லினிச்
சற்றேய்வாய் மனமே. (அ)

கல்லார்நல்லவரோ சொலுங் காமக் கலகுதர்க்கம்
பொல்லாச்சூது புலைகள வாதியைக்
கல்லார் நல்லவரோ. (கூ)

வல்லாராவர்களோ குகன் வார்கழற்கன் பியற்றி
தெல்லாவித்தையு மென்னறக் கற்கினும்
வல்லாரா வர்களோ. (கo)

வாராதொன்றுளதோ மயில் வாகனத்தெம் பெருமான்
சீரார் சேவடி சிந்தனை செய்திடில்
வாராதொன் றுளதோ. (கக)

சாராய் நெஞ்சகமே குரு சாமியருண் மொழியை
நேராய்க் கொண்டு நிதங்கும சேவனைச்
சாராய் நெஞ்சகமே. (கஉ)

முருகன்றுணை.

சிவமயம்.

சுப்பிரமணியர் தோத்திரம்.

பண் – நட்டராகம்.

கந்தா வேன்முருகா வுயர் காங்கே யாகட்டம்பா
நந்தா வாழ்வருளும் வள்ளி நாயனே குமரா
சந்தார் தின்புயத்தோய் சிவ சண்முக தேசிகனே
எந்தா யுன்கழலே யெளி யேனுக் குகந்தருளே. (க)

அருளே யாரமுதே சொலு மாதிமத் யாந்தமிலாப்
பொருளே பூரணமே யெனப் போற்றடி யாருளத்தின்
தெருளே யற்புதமே வும்பர் சேனைக் கதிபதியே
மருளே னுய்வுறுவான் வரு வாய்குரு மாமணியே. (உ)

மணியே யுள்ளொளியே மறை வாக்கியத் தின்முடிவாழ்
அணியே நிர்க்குணமே யகண் டாநந்த சின்மயனே
பிணியே லங்கமியா னெனும் பித்தொழிந் துன்னடிக்காம்
பணியே செய்யவருள் பணிப் பாய்வடி வேலோனே. (ங)

வேலா மான்முதலோர் புகழ் வெள்விடை யோனருளும்
பாலா வன்புருகித் தொழும் பத்தர்தமக் கருள்செய்
சீலா மாமயின்மேல் வரும் செய்வசி காமணியே
மாலா மெழ்பவம்போ மொரு வார்த்தை யெனக்குரையே. (ச)

உரையே னின்புகழை யொரு போதிலு மென்னிதையங்
கரையே னின்னினைந்தே யனற் கண்ட மெழுகெனவே
நிரையே ருழியிற்கண் வளர் சீதர னுர்மருகா
புரையே னுக்கெவணின் னருட் போதம் வெளிப்படுமே. (ஞ)

வெளியே மேல்வெளியே நாளும் விண்ணவ ரெண்ணமுறுங்
களியே கற்பகமே யெனைக் காக்கும் பெருந்தகையே
அளியே றுங்கடம்பின் மல ராரம்புனைந் தோனே
எளியே னின்னையல்லாற் றுணை யேதுமறியேனே. (ஏ)

அறியா மைக்குணத்தா லெளி யாரனந்தஞ் செயினுங்
குறியா தாளுதனின் னருட் கொள்கையன் றேகுமரா
எறியா சைக்கடலைக் கடந் தேறித்துரியநிலை
பிறியா நின்னடியார் பெறும் பேறெனக் கீவாயே. (ஐ)

வாயோ னைந்தவித்தே மன மன்னியுனைப் பரவுந்
தூயோர் தாளிணையென் முடி சூடுவ தென்று கொலோ
மாயோ னேரிளையாண் மலி மங்கை யுமை பயந்த
சேயோ னேகுழகா வளர் சேவற் கொடியோனே. (அ)

கொடிதா மூவிலைவேல் குணங் கையினிற் கொண்டட்டதட்டிக்
கடிதாமெதியின்மீ தடுங் காலன்வருமூனம் வெண்
பொடிதா வொண்ணுதலோ யெழிற் பூவையிருவருடன்
நெடிதா மஞ்ஞையிலென் முனீவருவாய்குகனே. (கூ)

குகனே சண்முகனே யருட்கோனே நான் மறைவா
சகனே மெய்யடியார்க் கிதந் தந்தருளீராறம்
பகனே தற்பரனே கிரு பாகராசாகரசிற்
சுகனே யென்றனெதிர் வந்து தோன்றி யுகந்தாளே. (கூ)

சுப்பிரமணியர்தோத்திர முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.